ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2284 2022 ජූනි මස 10 වැනි සිකුරාදා 2022.06.10

*2284 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு யூன் மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 956 |
| துணைவிதிகள் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் | |
| கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |
| வரவு செலவுத் திரட்டுகள் | - |
| வரவு செலவுக் கூற்றுகள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| நானாவித அறிவித்தல்கள் | 959 |


**கவனிக்க.**- (i) உள்ளூராட்சி அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தம்) சட்டமூலம் 2022, மே 27 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பகுதி II இற்குரிய குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(ii) அபாயகரமான விலங்குகள் (திருத்தம்) சட்டமூலம் 2022, மே 27 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பகுதி II இற்குரிய குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2022, யூலை மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2022, யூன் மாதம் 17 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## பேருவளை பிரதேச சபை

பாதைகளுக்கு பெயர் சூட்டுதல்

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 198 ஆவது பிரிவின் பிரகாரம் இந்தப் பிரதேச சபையின் மாலேவன்பத்த உப அலுவலக அதிகாரப் பிரிவுக்குச் சொந்தமான கீழே அட்டவணையில் விவரிக்கப்பட்ட பாதைக்கு "**படைவீரர் லான்ஸ் கோப்ரல் என். டி. அசங்க சமீர மாவத்தை**" என பெயர் சூட்டுவதற்காக பிரதேச சபையின் 2021.08.17 ஆந் திகதி நடைபெற்ற மாதாந்தக் கூட்டத்தின் இலக்கம் ஈ.1.1 கொண்ட பிரேரணைக்கு மேல் மாகாண கௌரவ ஆளுநரின் அங்கீகாரம் கிடைக்கப்பட்டுள்ளது என்பதால் அந்தப் பாதை 2022.04.08 ஆந் திகதி தொடக்கம் "**படைவீரர் லான்ஸ் கோப்ரல் என். டி. அசங்க சமீர மாவத்தை**" என பெயர் சூட்டப்பட்டுள்ளதாக இத்தால் அறியத்தருகின்றேன்.*

பி. டபிள்யூ. எம். மேனக விமலரத்ன,
தவிசாளர்,
பேருவளை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
பேருவளை,
2022, மே 23.

### அட்டவணை

| | | |
|---|---|---|
| 1. உள்ளூராட்சி மன்றத்தின் பெயர் | : | பேருவலை பிரதேச சபை |
| 2. மாவட்டம் | : | களுத்துறை |
| 3. பிரதேச செயலாளர் பிரிவு | : | பேருவலை |
| 4. வீதியின் தற்போதைய பெயர் | : | தர்கா நகர் - மாலேன்கொட பாதையில் யக்வத்த வீதியில் ஆரம்பித்து ஹாதாதுடுவையில் முடிவடையும் பாதை |
| 5. பாதையின் ஆரம்பம் | : | தர்கா நகர் - மாலேன்கொட பாதையில் யக்வத்த வீதியில் |
| 6. பாதையின் முடிவு | : | ஹாதாதுடுவையில் முடிவடைகின்றது |
| 7. புதிதாக இடப்பட்டுள்ள பெயர் | : | "படைவீரர் லான்ஸ் கோப்ரல் என். டி. அசங்க சமீர மாவத்தை" |

06 - 126

---

## பேருவளை பிரதேச சபை

பாதைகளுக்கு பெயர் சூட்டுதல்

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 198 ஆவது பிரிவின் பிரகாரம் இந்தப் பிரதேச சபையின் மாலேவன்பத்த உப அலுவலக அதிகாரப் பிரிவுக்குச் சொந்தமான கீழே உப அட்டவணையில் விவரிக்கப்பட்ட பாதைக்கு "**படைவீரர் கோப்ரல் எம். வீ. கே. பிரியந்த மாவத்தை**" என பெயர் சூட்டுவதற்காக பிரதேச சபையின் 2021.08.17 ஆந் திகதி நடைபெற்ற மாதாந்தக் கூட்டத்தின் இலக்கம் ஈ.1.2 கொண்ட பிரேரணைக்கு மேல் மாகாண கௌரவ ஆளுநரின் அங்கீகாரம் கிடைக்கப்பட்டுள்ளது என்பதால் அந்தப் பாதை 2022.04.08 ஆந் திகதி தொடக்கம் "**படைவீரர் கோப்ரல் எம். வீ. கே. பிரியந்த மாவத்தை**" என பெயர் சூட்டப்பட்டுள்ளதாக இத்தால் அறியத்தருகின்றேன்.*

பி. டபிள்யூ. எம். மேனக விமலரத்ன,
தவிசாளர்,
பேருவளை பிரதேச சபை.

பேருவளை பிரதேச சபை அலுவலகம்,
அலுத்கம,
2022, மே 23.

**அட்டவணை**

| | | |
|---|---|---|
| 1. உள்ளூராட்சி மன்றத்தின் பெயர் | : | பேருவலை பிரதேச சபை |
| 2. மாவட்டம் | : | களுத்துறை |
| 3. பிரதேச செயலாளர் பிரிவு | : | பேருவலை |
| 4. வீதியின் தற்போதைய பெயர் | : | பிங்ஹேன குடியிருப்பு வீதி |
| 5. பாதையின் ஆரம்பம் | : | பீ. ஆர். டி. ஏ. பாதையில் மஹகடை சந்தியில் |
| 6. பாதையின் முடிவு | : | திரி ஏக்கர் பாம் அமைந்துள்ள இடத்தில் |
| 7. புதிதாக இடப்பட்டுள்ள பெயர் | : | "படை வீரர் கோப்ரல் எம். வீ. கே. பிரியந்த மாவத்தை" |

06 - 127

---

**பஸ்கொட பிரதேச சபை**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 134 ஆம் பிரிவின் முதலாம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபைக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் பஸ்கொட பிரதேச சபையினால் நகர அபிவிருத்தி அதிகார சபை சட்டத்தின் கீழ் விளம்பரப்படுத்தப்பட்ட பிரதேசத்தை அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசமாக விளம்பரப்படுத்தப்பட 2020.09.15 ஆந் திகதிய சபை கூட்ட அறிக்கையின் தீர்மான இலக்கம் 05. 01 இன் கீழ் சபை ஏற்றுக் கொண்டுள்ளது. அதன்படி கீழ் குறித்த கருத்துக்களை மேற் குற்த்த பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் அனுமதிக்கப்பட்டதாக பொது மக்களுக்கு இதன் மூலம் அறிவித்தல் விடுக்கின்றேன்.

தம்ஸர கருணாஜீவ லன்தகே,
உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,
மாத்தறை.

**தீர்மானம்**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 134 ஆம் பிரிவின் முதலாம் உப பிரிவின் பிரகாரம் பஸ்கொட பிரதேச சபைக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் பஸ்கொட பிரதேச சபையின் நகர அபிவிருத்தி அதிகார சபை சட்டத்தின் கீழ் விளம்பரப்படுத்தப்பட்ட பிரதேசத்தை அல்லது கீழே அட்டவணையில் உட்படுத்தப்பட்ட பிரதேசத்தை அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசமாக விளம்பரப்படுத்தப்பட உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் அனுமதியின் மீது செயற்படுத்தப்பட தகுந்ததாக பஸ்கெட பிரதேச சபையின் தலைவர் ஈஷ்வரகே மஹிந்த ஆகிய நான் கருத்துத் தெரிவிக்கின்றேன்.

குறித்த பிரதேசம்

I ஆம் நிரல்

தென் மாகாணத்தின், மாத்தறை மாவட்டத்தின் பஸ்கொட பிரதேச சபை வளுப் பிரதேசத்தினுல் (பஸ்கொட பிரதேச செயலகப் பிரிவில்) அமைந்துள்ளதும் இலக்கம் 249 **A** ஊறுபொக்க கிராம அலுவலர் பிரிவின் இலக்கம் 249 கீரியிட்டிய கிழக்கு, இலக்கம் 249 **B** மகிலியதென்ன, இலக்கம் 249 **C** ஹீகொட, இலக்கம் 249 **B** கின்னலிய மேற்கு இலக்கம் 253 **A** தம்பஹல மேற்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் அமைந்துள்ளதும் இங்கு அட்டவணையில் இரண்டாம் நிரலில் விபரிக்கப்பட்டுள்ள வீதிகளின் எல்லைக் குறிகளும் மொத்த நிலப்பரப்பும்.

வடக்கு :

மாத்தறை கொட்டபொல வீதியின் மையக்கோட்டுடன் மற்றும் ஹஸரலிகம வீதியின் மையக் கோட்டும் இணையும் இடத்திலிருந்து (புலே ஹன்திய ) ஆரம்பித்து வடகிழக்கு நோக்கி ஹஸரலிகம வீதியின் மத்திய கோட்டுடன் வரையப்பட்ட ஊரபொகு ஒய

குறுக்கே கல்லேல்ல வீதியின் மத்திய கோட்டின் ஊடாக வடகிழக்கு திசை நோக்கி வரையப்பட்ட பின்னகெட்டிய வீதியின் மத்திய ரேகை இணையும் இடம் வரையும். அவ்விடத்திலிருந்து கலலேல்ல வீதியின் ( ரத்னபால மாவத்தை) மத்திய ரேகை ஊடாக வடகிழக்கு நோக்கி வரையப்பட்ட ஊருபொக்க அம்பிலிபிட்டிய வீதியின் மத்திய கோடு இணையும் வரை (பொல்கஸ்தெனிய சந்தி) அவ்விடத்திலிருந்து அவ் வீதியின் மத்திய ரேகை ஊடாக தென் மேற்கு திசைக்கு வரையப்பட்ட தம்மசித்தி மாவத்தையின் (கரவ்தெனிய வீதி) மத்திய ரேகை சந்திக்கும் இடம் வரை. அவ்விடம் தொடக்கம் அவ் வீதியின் மத்திய ரேகை ஊடாக வடகிழக்கு, தென் கிழக்கு திசை நோக்கி வரையப்பட்ட கோட்டுடன் செல்லவத்த ஓடையின் மத்திய ரேகை சந்திக்கும் இடம் வரை (அமங்கிலிய வாய்க்கால்).

கிழக்கு :

இறுதியாக குறிக்கப்பட்டு இணைக்கப்பட்ட இடத்திலிருந்து அதன் ஓடையின் மத்திய கோட்டினூடாக தென்மேற்கு வடகிழக்கு மற்றும் தென்மேற்கு பகுதிக்கு வரையடப்பட்ட கோடு ஊறுபொக்க ஓடையின் மத்திய ரேகை சந்திக்கும் இடம் வரையாகும். அவ்விடத்திலிருந்து ஊருபொக்க ஓயவின் மத்திய கோட்டினூடாக வடகிழக்கிற்கு நோக்கி வரையப்பட்ட கோடு ஊரபொகு ஓயவின் ஊரபொக்க கட்டவண வீதி இணையும் உமன்தொல பாலத்தின் மத்திய பகுதி இணையப்படும் வரை அவ்விடத்திலிருந்து ஊரபொக்க கட்டுவன வீதியின் மத்திய கோட்டினுடாக வடகிழக்கின் தென் பகுதி மற்றும் வட பகுதிக்கு வரையப்பட்ட கோட்டுடன் தென்னஹேன வீதியின் மத்திய கோடு சந்திக்கும் இடம் வரையும். அவ்விடத்திலிருந்து அவ்வீதியின் மத்திய் கோட்டினூடாக தென் பகுதிக்கு வரையப்பட்ட கோடு ஊரு பொக்க ஹீலங்கந்த வீதியின் மத்திய கோடு சந்திக்கும் இடம் வரையாக.

தெற்கு :

இறுதியாக இணைக்கப்பட்ட இடத்திலிருந்து அவ்வீதியின் மத்திய கோட்டினூடாக மேற்கு திசைக்கு வரையப்பட்ட கோடு மாத்தறை கொட்டபொல வீதியின் மத்திய கோடு இணையும் இடம் வரை (ஹீகொட முற் சந்தி) அவ்விட த்திலிருந்து அவ் வீதியின் மத்திய கோட்டினூடாக வட கிழக்கு, மேற்கு, தென் மேற்கு மற்றும் வட மேற்கு திசையாக வரையப்பட்ட கோடு பொரலம்பொத்த புதிய கிராம வீதியின் மத்திய கோட்டினூடாக மேற்கு திசைக்கு வரையப்பட்ட கோடு கல்எனமுல்ல வீதியின் மத்திய கோடு இணையும் இடம் வரை அமையும்.

மேற்கு :

இறுதியாக குறிப்பிடப்பட்டு இணைக்கப்பட்ட இடத்திலிருந்து அவ் வீதியின் மத்திய கோட்டினூடாக மேற்கு திசையிலிருந்து வட கிழக்கு திசை நோக்கி வரையப்பட்ட கோடு தம்பிலிய வீதியின் மத்திய கோடு சந்திக்கும் இடம் வரை அமையும் அவ்விடத்திலிருந்து தம்பிலிய வீதியின் மத்திய கோட்டினூடாக தென் மேற்கு திசைக்கு வரையப்பட்ட கோடு ஊருபொக்க கீரிபிட்டிய வீதியின் மத்திய கோடு இணையும் இடம் வரையும், இவ்விட த்திலிருந்து அவ் வீதியின் மத்திய கோட்டினூடாக வட மேற்கு மற்றும் மேற்கு திசையாக வரையப்பட்ட கோடு தொலமுல்ல வீதியின் கோடு சந்திக்கும் இடம் வரையாகும், அவ்விடத்திலிருந்த அவ் வீதியின் மத்திய கோட்டினூடாக மேல் மாகாண திசைவரை வரையப்பட்ட கோடு சமகி மாவத்தையின் மத்திய ரேகை சந்திக்கும் இடம் வரையும். அவ்விடத்திலிருந்து அவ் வீதியின் மத்திய கோட்டினூடாக வட மேற்கு திசைக்கு வரையப்பட்ட ரேகை சவ்சிறி உயன வீதியின் மத்திய கோடு சந்திக்கும் இடத்திற்கும், அவ்விடத்திலிருந்து வீதியின் மத்திய கோடு சந்திக்கும் இடம் வரையும், அவ்விடத்திலிருந்து வீதியின் மத்திய கோடு வட மேற்கு திசைக்கு வரையப்பட்ட இடத்திலிருந்து பேருபவுல தோட்டத்தின் கிழக்கு எல்லை வரையாக அமையும். அவ்விடத்திலிருந்து பேரு பவுல தோட்டத்தின் கிழக்கு எல்லை ஊடாக தென் மேற்கு மற்றும் மேல் திசைக்கு வரையப்பட்ட கோடு மாத்தறை கொட்ட பொல வீதியின் மத்திய கோடு சந்திக்கும் இடம் வரைக்கும், அவ்விட த்திலிருந்து அவ் வீதியின் மத்திய கோட்டினூடாக தென் மேற்கு திசைக்கு வரையப்பட்ட கோடு ஆரம்ப இணைப்பு சந்திக்கு இடம் வரையாகும்.

06 - 201

**1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்றங்களின் (துணைவிதிச் சட்டம்) சட்டத்தின்**

**உடுநுவரை பிரதேச சபை**

*261 ஆம் அத்தியாயமான 1952 ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்றங்களின் (துணை விதிச் சட்டம்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (1) உப பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் உடுநுவரை பிரதேச சபையில் 2022.04.06 ஆந் திகதி நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*டீ. எம். ஜீ. தென்னகோன்,*
*தலைவர்,*
*உடுநுவரை பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*உடுநுவரை,*
*2022.05.19.*

**தீர்மானம்**

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) உப பிரிவின் (அ) பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 261 ஆம் அத்தியாயமான 1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்றங்களின் (துணைவிதிச் சட்டம்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) உப பிரிவின் கீழ் மத்திய மாகாண சபையின் உள்ளூராட்சி மன்ற விடய பொறுப்பு அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி மத்திய மாகாண உள்ளூராட்சி விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சரினால் தயாரிக்கப்பட்ட, 2013.06.28 ஆந் திகதி கொண்ட 1816/42 ஆம் இலக்கம் கொண்ட இலங்கைச் சநைாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி அறிவித்தலின் IV (ஆ) பிரசுரிக்கப்பட்டதான மற்றும் மத்திய மாகாண சபையினால் அங்கீகர்ககப்பட்ட 2013.06.28 ஆந் திகதியுடைய, 1816/42 ஆம் இலக்கம் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் பிரகடனப்படுத்தப்பட்ட மாநகர சபை/ நகர சபை/ பிரதேச சபைகளின் அங்கீகரிக்கப்பட்ட துணை சட்ட விதிகள் / அங்கீகரிக்கப்பட்ட துணை சட்ட விதிகளில் இலக்கம் 1 முதல் 29 வரையான பகுதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள அங்கீகர்க்கப்பட்ட துணைச் சட்டவிதிகள் இந்த தீர்மானம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படுகின்ற தினத்திலிருந்து அமுல்படுத்துவதனை ஏற்றுக்கொள்வதற்கு மேலே குறிப்பிடப்பட்டுள்ள உள்ளூராட்சி நிறுவனம் (அங்கீகரிக்கப்பட்ட துணை சட்ட விதிகள்) சட்டத்தின் 03 ஆம் பிரிவின் (1) உப பிரிவிற்கு இணங்க உடுநுவரை பிரதேச சபை தீர்மானிக்கின்றது.*

*06 - 208*

---

# நானாவித அறிவித்தல்கள்

**அத்துரலிய பிரதேச சபை**

குத்தகை வரி

*அத்துரலிய பிரதேச சபைக்குரிய மோடர் கிரேடர் இயந்திரம் மற்றும் பெகோ லோடர் இயந்திரங்களை குத்தகைக்கு விடுவது தொடர்பாக ஒரு மணி நேரத்திற்கு அறவிடப்படும் கட்டணத்தையும், டிரக் நீர் பவுசர் மற்றும் டிரக்கர் நீர் பவுசர், தொடர்பாகவும் அறவிடப்படும் கட்டணத்தை 2022.03.22 ஆந் திகதி நடத்தப்பட்ட சபைக் கூட்டத்தின் தீர்மான இலக்கம் 05. 01(xiv) இன் கீழ், கீழே குறித்துள்ளவாறு திருத்தப்பட்டுள்ளன.*

| *இயந்திரம் (வாகனம்)* | *முதல் மணித்தியாலத்திற்கு அறவிடப்படும் கட்டணம்* | *புதிதாக திருத்தப்பட்ட கட்டணம் (ஒரு மணி நேரத்திற்கு)* |
|---|---|---|
| *01. மோட்டர் கிரேடர் இயந்திரம்* | *ரூபா 4500.00* | *ரூபா 5500.00* |
| *02. பெகோ லோடர் இயந்திரம்* | *ரூபா 2200.00* | *ரூபா 3200.00* |

| *இயந்திரம் (வாகனம்)* | *ஒரு தடவைக்கு அறவிடப்படும் கட்டணம் (பழைய)* | *புதிதாக திருத்தப்பட்ட கட்டணம்* |
|---|---|---|
| 03. டிரக் நீர் பவுசர் | ரூபா 2500.00 | ரூபா 3000.00 |
| 04. டிரக்கர் நீர் பவுசர் | ரூபா 1000.00 | ரூபா 1500.00 |

டபி. ஜீ. நிஹால் த சில்வா,
தலைவர்,
அத்துரலிய பிரதேச சபை.

2022, மே 05.

06 - 209